بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *10/11/2023* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**✪ பத்ர் போர் தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சங்கள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு**

**✪ மத்திய கிழக்கு நாடுகளில் போர் நிலைகளை முன்னிறுத்தி சிறப்பு துஆக்களுக்கான தொடர் வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அம்சங்கள் தொடர்பாக பத்ர் யுத்தத்திற்குச் சற்றே பிறகுள்ள நிகழ்வுகள் பற்றி நான் கூறிக் கொண்டிருந்தேன். இது தொடர்பாக ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டின் நிகழ்வுகளில் ஜன்னத்துல் பகீ நிறுவப்பட்டதும் ஒன்றாகும். இதன் விபரங்கள் இவ்வாறு உள்ளன:

மதீனா முனவ்வராவில் யூதர்களுக்கும் பிற கோத்திரங்களுக்கும் தத்தமக்கு என சொந்தமாக அடக்கஸ்தலங்கள் இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்த போது, முஸ்லிம்களுக்கு என தனி கப்ருஸ்தானுக்கான தேவை உணரப்பட்டது. எனவே, பகீயுல் கர்கதின் கப்ருஸ்தானை முஸ்லிம்களுக்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டது. அரபு மொழியில் மரங்கள் ஏராளமாக இருக்கும் இடம் பகீ எனப்படுகிறது. இந்தக் கப்ருஸ்தான் ஜன்னத்துல் பகீ என்றும் அழைக்கப்படுகிறது.

*ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:* ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்காக ஒரு கப்ருஸ்தானைத் தேர்ந்தெடுத்தார்கள். அது ஜன்னத்துல் பகீ எனப்படுகிறது. எல்லாருக்கும் முதலாக இந்தக் கப்ருஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டவர் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்ஊன் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் மிகவும் நற்பண்புள்ள, இறைவணக்கம் செய்யக்கூடிய மற்றும் சூஃபி இயல்புடைய மனிதராக இருந்தார்கள். முஸ்லிம் ஆன பிறகு, ஒருமுறை இவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், முற்றிலும் உலகத்தைத் துறந்து, தம்முடைய மனைவி மக்களை விட்டுப் பிரிந்து, இறைவணக்கத்திற்காக மட்டும் தம் வாழ்வை அர்ப்பணிக்க அனுமதி கோரினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் இறைவனுக்கான உரிமையை இறைவனுக்கு செலுத்த வேண்டும். மனைவி மக்களுக்கான உரிமையை மனைவி மக்களுக்கு செலுத்த வேண்டும். விருந்தினர்களுக்கான உரிமையை விருந்தினர்களுக்கு செலுத்த வேண்டும். உங்கள் ஆன்மாவுக்கான உரிமையை உங்கள் ஆன்மாவுக்கு செலுத்த வேண்டும். ஏனெனில், இந்த உரிமைகள் அனைத்தும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டவை ஆகும். இவற்றை

செலுத்துவது இறைவணக்கத்தில் அடங்கும். அதாவது, உரிமைகளை செலுத்துவதும் இறைவணக்கத்தில் அடங்கும்.

சுருங்கக்கூறின், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்ஊன் (ரலி) அவர்களுக்கு உலகத்தைத் துறப்பதற்கு அனுமதி வழங்கவில்லை. இஸ்லாத்தில் உலகைத் துண்டித்துக் கொள்ளுதல், துறவரத்தை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை ஆகுமற்றவையாகக்கூறி, தமது உம்மத்துக்காக குறைத்தல், மிகைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நடுநிலையான வழியை ஏற்படுத்தி விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்ஊன் (ரலி) அவர்கள் வஃபாத் ஆனதனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பெருந்துயரம் ஏற்பட்டது. அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: இவர்கள் வஃபாத் ஆன பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களின் நெற்றியில் முத்தமிட்டார்கள். அப்பொழுது ஹுஸூர் (ஸல்) அவர்களுடைய கண்கள் குளமாகியிருந்தன.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இப்பொழுது நான் பனூ கத்ஃபான் போர் பற்றி கூறுகிறேன். கத்ஃபான் கோத்திரத்தின் கிளைக் கோத்திரங்களான பனூ ஸஃலபா மற்றும் பனூ முஹாரிப் ஆகியவை ஓரிடத்தில் ஒன்று கூடியுள்ளன என்ற தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது. இந்தத் தகவல் கிடைத்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 450 சஹாபாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ரபீயுல் அவ்வல் மாதத்தில் இந்தப் போர் முன் வந்தது. ரபீயுல் அவ்வல் 12 ஆம் தேதி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தப் போருக்காகப் புறப்பட்டார்கள். இணைவைப்பாளர்களின் படைவகுத்தலுக்கு எதிராக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள். அப்பொழுது வழியில் சஹாபா பெருமக்களுக்கு பனூ ஸஃலபா கோத்திரத்தின் ஒரு மனிதர் கிடைத்தார். சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) அவரை சிறைபிடித்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன் நிறுத்தினார்கள். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தனது சமுதாயத்துடைய செயல்பாடுகள் குறித்து தெரியப்படுத்தினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். அவர் உடனடியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், தன்னுடைய சமுதாயத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் முஸ்லிம்களின் படையும் தங்களை நோக்கி வருவது தெரிந்தால், அவர்கள் ஒருபோதும் அன்னாருடன் (நேருக்குநேர்) மோத மாட்டார்கள். மாறாக, அக்கம்பக்கத்து மலைகள் மீது ஏறிக் கொள்வார்கள் என்று பணிவுடன் கூறினார். ஆக, முஸ்லிம்கள் அவர்களை நோக்கி முன்னேறியதும், உண்மையிலேயே அவர்கள் (நேருக்கு நேர்) மோதவில்லை. மாறாக, அக்கம்பக்கத்து மலைகள் மீது ஏறிக் கொண்டனர்.

இதே சந்தர்ப்பத்தில்தான், அந்தப் பிரிசித்திப் பெற்ற சம்பவம் நிகழ்ந்தது. அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு மரத்தின் நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி

அலைஹிம் அஜ்மயீன்) அனைவரும் தத்தமது பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில், ஒரு மனிதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வாளை ஏந்தியவாறு, 'முஹம்மதே! (ஸல்) இப்பொழுது உம்மை என்னிடமிருந்து யார் காப்பாற்றுவார்?' என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்' என்று கூறினார்கள். இதனால் அவர் கையில் இருந்து வாள் விழுந்து விட்டது. (ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உடனடியாக அந்த வாளை எடுத்துக் கொண்டு, அவரைப் பார்த்து, 'இப்பொழுது உன்னை என்னிடமிருந்து யார் காப்பாற்றுவார்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர் என்னையோ இப்பொழுது (தங்களைத் தவிர வேறு) எவராலும் காப்பாற்ற இயலாது என்று கூறி, கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை ஏற்றார். மேலும், இனி நான் ஒருபோதும் தங்களுக்கு எதிராக மக்களைப் படைதிரட்ட மாட்டேன் என்று உறுதியளித்தார்.)

இந்தப் போரின் போது நிகழ்ந்த சம்பவங்களில் ஒரு சம்பவம் ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்களின் வஃபாத்தும் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களின் திருமணமும் ஆகும். அறிவிப்புகள்படி, ஹுஸூர் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்திற்காகப் புறப்பட்ட போது, ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்கள் நோய்வாய் பட்டிருந்தார்கள். எனவே, அவர்களைப் பார்த்துக் கொள்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மதீனாவில் விட்டுச் சென்றார்கள். பத்ர் யுத்தத்தில் கிடைத்த வெற்றியின் நற்செய்தியை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் மதீனாவை நோக்கி வந்த அந்த நாளில் ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்கள் வஃபாத் ஆனார்கள்.

ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்களது வஃபாத்துக்குப் பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை சந்தித்த போது அவர்களிடம், அல்லாஹ் ருகய்யாவுடன் நீர் நல்ல முறையில் நடந்து கொண்டதற்காக, ருகய்யாவுக்கு வழங்கப்பட்ட அளவு மஹர் தொகைக்கே, உம்மு குல்ஸூமுக்கு உம்முடன் நிக்காஹ் செய்து வைத்து விட்டான்' என்று கூறினார்கள்.

திருமணத்துக்கு மூன்று தினங்களுக்குப் பிறகு, கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களிடம் வருகை வந்தார்கள். அவர்களிடம், 'என் அன்பு மகளே! நீ உன் கணவரை எப்படிப்பட்டவராகக் காணப்பெற்றாய்?' என்று வினவினார்கள். அதற்கு உம்மு குல்ஸூம் (ரலி) அவர்கள், 'உஸ்மான் மிகச் சிறந்த கணவர் ஆவார்கள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ 9 ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு வஃபாத் ஆகி விட்டார்கள். ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களது வஃபாத்தின் போது, கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் 'எனக்கு மூன்றாவதும் ஒரு மகள் இருந்திருந்தால், நான் அவரையும் உஸ்மானுக்கு மணமுடித்துக் கொடுத்திருப்பேன்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களின் திருமணத்தைப் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் புதல்வியும், ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி) அவர்களின் துணைவியாரும் ஆன ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்கள் வஃபாத் ஆன பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்கள் தம் இன்னொரு மகள் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டார்கள். (ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி)) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு மூத்தவராகவும் ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்களுக்கு இளையவராகவும் இருந்தார்கள். இதன் காரணமாகவே, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை 'ஸுன் நூரைன் - இரு ஒளிகளை உடையவர்' என்று அழைக்கிறோம்.

ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களுடைய நிக்காஹ் ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ரபீயுல் அவ்வல் மாதத்தில் நடைபெற்றது. இது ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களுக்கு இரண்டாவது நிக்காஹ்வாக இருந்தது. இதற்கு முன்னர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தந்தையின் சகோதரனான அபூ லஹபுடைய இரண்டு மகன்களுடன் ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களுக்கும் நிக்காஹ் நடைபெற்றிருந்தது. எனினும், திருமண வழியனுப்புதலுக்கு முன்னதாகவே மார்க்க எதிர்ப்பு காரணமாக இந்த (இரு) நிக்காஹ்கள் முடிவுக்கு வந்து விட்டன.

இந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களில் பனூ ஸுலைம் போர் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பனூ ஸுலைம் கோத்திரத்தின் ஒரு பெரும் எண்ணிக்கை முஸ்லிம்களுக்கு எதிராக ஒன்று திரண்டிருப்பதாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கிடைத்தது. இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மி மக்தூம் (ரலி) அவர்களை மதீனாவில் தம் பிரதிநிதியாக நியமித்து விட்டு, 300 சஹாபாவுடன் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஜமாதில் ஊலா மாதம் 6 ஆம் தேதி புறப்பட்டார்கள். பிறிதோர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹுஸூர் (ஸல்) அவர்கள் (மதீனாவில்) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைத் தம் பிரதிநிதியாக நியமித்திருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வழியில் பனூ ஸுலைம் கோத்திரத்தின் ஒரு மனிதர் கிடைத்தார். அவர் பனூ ஸுலைம் கோத்திரத்தினர் பிரிந்து சென்று விட்டார்கள் என்பதைத் தெரியப்படுத்தினார். விசாரித்ததில், அந்த மனிதர் கொடுத்த தகவல் சரிதான் என்பது உறுதியானது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். போர் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படவில்லை.

ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களுடைய தலைமையில் அனுப்பப்பட்ட ஒரு போர்ப்படையும் இருந்தது. அதைப் பற்றிய விபரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ஒருநாள் ஸஃப்வான் பின் உமையா தன்னுடைய கூட்டாளிகளிடம், 'முஸ்லிம்கள் நமது வியாபார மையமான சிரியாவுக்கு நாம் செல்லும் வழியைத் தடுத்து விட்டார்கள் என்று கூறினான். அதற்கு, 'நாம் கடற்கரை வழியை விட்டுவிட்டு ஈராக் வழியாக சிரியாவுக்குப் போகலாம்' என்று ஒருவன் ஆலோசனை கூறினான். எனவே, அந்த வழியைப் பற்றி அறிந்திருந்த ஒரு மனிதனின் உதவியோடு ஸஃப்வான் பின் உமையா புறப்படத் தீர்மானித்தான்.

வணிகக் குழு ஆயத்தத்தை மேற்கொள்ளத் துவங்கி விட்டது. இதற்காக ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ஜமாதில் ஆகிர் மாதத்தில் போர்படையை அனுப்ப வேண்டி வந்தது. இந்த (வணிகக் குழுவு புறப்படும்) செய்தி மதீனத்து மக்களை எட்டி விடக்கூடாது என்பது அந்த வணிகக் குழுவினரின் முழு முயற்சியாக இருந்தது.

ஆனால், இறை நாட்டமோ வேறு ஒன்றாக இருந்தது. எனவே, இந்த செய்தி ஹுஸூர் (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்து விட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் நூறு குதிரை வீரர்களை ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் அனுப்பி வைத்தார்கள். இது ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களுக்குத் தாம் ஓர் அமீராகச் சென்று, வெற்றியுடன் திரும்பிய வகையில் முதல் போர்ப்படை ஆகும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அந்த வணிகக்குழுக்கள் தடுத்து நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்னவெனில், அந்த வணிகக்குழுக்கள் மூலம் ஈட்டப் பெறும் இலாபங்கள் பிறகு முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இன்றைய காலத்தில் பல்வேறு நாடுகளில் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவது போலத்தான், அந்தக் காலத்தில் அந்த வணிகக்குழுக்களைத் தடுத்து நிறுத்துவதும் இருந்தது. இன்றைய நாள்களிலோ சிலநேரங்களில் இந்த நாடுகள் வறம்புமீறியும் கட்டுப்பாடுகள் விதிக்கின்றன. இவர்கள் என்ன இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்வது!

*குத்பாவின் இரண்டாவது பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இப்பொழுது நான் பாலஸ்தீனத்துக்காக மீண்டும் துஆவிற்காகக் கூற விரும்புகிறேன். இப்பொழுது குறைந்தபட்சம் சில மக்கள் பயந்து பயந்தாவது இந்த அநீதிக்கு எதிராகப் பேச ஆரம்பித்துள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால், இப்பொழுதோ சில யூதர்களும் இந்த அநீதிக்கு எதிராக குரல் எழுப்பியுள்ளார்கள். மேலும், 'ஏன் எங்களுக்கும் அவப்பெயர் ஏற்படுகிறீர்கள்' என்று தங்கள் அரசாங்கத்திடம் கேட்கிறார்கள்.

எவ்வாறு இருப்பினும், அந்நியர்களிடம் சின்னச் சின்னக் குரல்கள் எழத் தொடங்கி விட்டன. பாலஸ்தீனியர்கள் வரை உதவி சென்றடையும் பொருட்டு, தினமும் நான்கு மணி நேரத்துக்குப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இப்பொழுது கூறுகிறார்கள். இது எந்த அளவு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும், மீதமுள்ள 20 மணி நேரத்தில் இவர்கள் எத்தனை குண்டுகள் வீசப்போகிறார்கள் என்பதையும் அல்லாஹ்வே நன்கறிவான்.

பெரும்பாலான பெரிய அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும்கூட பாலஸ்தீனியர்களின் உயிரிழப்புகளுக்கு எந்த முக்கியத்துவமும் அளிப்பதில்லை. இவர்களுக்குத் தங்களுடைய சுய இலாபங்கள் உள்ளன. அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்! அல்லாஹ் ஒரு குறிப்பிட்ட நேரம் வரைதான் அவகாசம் வழங்குவான். பிறகு, இந்த (ஓர்) உலகம் மட்டுமல்ல; மாறாக, மறுமையும் (ஒன்று) உள்ளது. இந்த உலகத்திலும் பிடிக்கப்படலாம்; மேலும், மறுமையிலும் கண்டிப்பாக பிடிக்கப்படுவார்கள். எவ்வாறு இருப்பினும், நாம் அநீதிக்குள்ளான பாலஸ்தீனியர்களுக்காக அதிகம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு இந்த அநீதியிலிருந்து விடுதலை அளிப்பானாக! ஆமீன்!

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கீழ்வரும் இருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.

**1.** முதல் ஜனாஸா மதிப்பிற்குரிய ஹமீதுர் ரஹ்மான் கான் சாஹிப் அவர்களின் துணைவியாரான **மதிப்பிற்குரிய மன்ஸூபா பாஸ்மா சாஹிபா** அவர்களுடையதாகும். இவர்கள் ஹஸ்ரத் நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப்

அவர்கள் மற்றும் ஹஸ்ரத் சாஹிப்ஸாதீ அம்மத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா அவர்கள் ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிப் அவர்கள் மற்றும் ஹஸ்ரத் பூஸைனப் பேகம் சாஹிபா அவர்களின் மகள் வழிப் பேத்தியும் ஆவார்கள். மர்ஹூமா மியான் அப்பாஸ் அஹ்மத் கான் சாஹிப் அவர்கள் மற்றும் அமத்துல் பாரீ பேகம் சாஹிபா அவர்களின் மகள் ஆவார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவர்களின் திருமண சந்தர்ப்பத்தில் அறிவுரைகள் வழங்குகையில் இவ்வாறு கூறினார்கள்: நிக்காஹ் சந்தர்ப்பங்களில் ஓதப்படும் வசனங்களில், يَاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ என்ற சொற்களுடன் ரப்பிடம் தக்வாவை மேற்கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இது எதைச் சுட்டிக் காட்டுகிறது என்றால், எவ்வாறு இறைவன் உங்களைப் (படைத்து) பரிபாலிக்கக்கூடியவனாக இருக்கிறானோ, அவ்வாறே உங்கள் மீதும் எத்தகைய சில பொறுப்புகள் விழவிருக்கின்றன என்றால், அவற்றை நிறைவேற்றுவதற்காக நீங்களும் பரிபாலிக்கும் உணர்வோடு அல்லாஹ்வுக்கான தக்வாவை மேற்கொள்ளுங்கள்.

மர்ஹூமா இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றிதெரிவிப்பவராக, உள்ளபடியே பேசக்கூடியவராக, தொழுகையையும் நோன்பையும் முறையாகப் பேணக்கூடியவராக, கிலாஃபத்துக்கு மிகவும் மதிப்பளிக்கக்கூடிய பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய பிள்ளைகளுக்கும் இவர்கள் செய்த நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

2. இரண்டாவது ஜனாஸா ஃபைஸலாபாதின் வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைப் பதிவாளர் **சௌத்ரி ரஷீத் அஹ்மத் சாஹிப்** அவர்களுடையதாகும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவர்களுடைய புகழுக்குரிய நற்பண்புகளை எடுத்துரைத்து விட்டு கூறினார்கள்:* எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய பிள்ளைகளுக்கும் இவர்கள் செய்த நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)